இயல் ஒன்று

# என்ன சத்தம்...

துணைப்பாடம்




அன்று ஞாயிற்றுக் கிழமை பள்ளிக்கு விடுமுறை என்பதால் செழியன் தன் பாட்டியுடன் ஆடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்றான்.

ஆடுகள் காட்டின் ஓரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. செழியன் ஒரு மரத்தடியில் அமர்ந்து காட்டின் அழகை இரசித்துக் கொண்டிருந்தான். அந்த மரத்தின் மேலிருந்த குரங்குகளின் அலப்பும் அலப்பறை ஓசை அவனுக்கு எரிச்சலாக இருந்தது. அதனால், அவன் வேறு ஒரு மரத்தடிக்குச் சென்று அமர்ந்தான். அங்கிருந்த மரங்களில் அணில்கள் ஓடிப் பிடித்து விளையாடின. அம்மரத்திலிருந்த குயில் ஒன்று குக்கூ குக்கூ ..... எனக் கூவியது. குயிலின் ஓசை செழியனின் செவிக்கு இனிமையாக இருந்தது. அப்படியே படுத்துச் சிறிது நேரம் ஓய்வெடுத்தான். திடீரென ஆடுகள் மே.....மே......எனக் கத்தும் சத்தம் கேட்கவே, செழியன் பதற்றத்துடன் எழுந்து என்னவென்று கவனித்தான். அருகில் பச்சைப் புதரருகே நரி ஒன்று ஆடுகளைக் கொன்று தின்ன, நேரம் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். உடனே ஒரு குச்சியை வளைத்து வில்லாக்கி நரியை நோக்கி அம்பை எய்தான். அம்பு பட்டுக் காயமடைந்த நரி ஊளையிட்டுக் கொண்டே ஓடி விட்டது.

செழியன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு பாட்டியுடன் வீட்டிற்குக் கிளம்பினான். தூரத்தில் எங்கோ சிங்கம் முழங்கும் சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் காடே பரபரப்பாகி விட்டது. பறவைகள் இறக்கைகளைப் படபடவென அடித்துக் கொண்டு இங்குமங்கும் பறந்தன. யானை பிளிறியது; ஆந்தை அலறியது;



கீரிப்பிள்ளையும் செடிகளின் மறைவிலிருந்து ஓடியது மயில் அகவியது; பாம்பும் தன் புற்றிலிருந்து வெளியே வந்து சீறியது; குதிரை கனைத்தது. இவற்றை எல்லாம் கேட்ட செழியனுக்குப் பயத்தால் நாக்கு வறண்டது. தான் வைத்திருந்த தண்ணீரைக் குடித்தான். பாட்டியுடன் வீட்டிற்குச் செல்லும் வழியில் கம்பங்கொல்லையில் வண்டுகள் முரலும் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. ஊருக்கு அருகே




வந்த பிறகுதான் செழியனுக்குப் பயம் சற்றுக் குறைந்தது. செழியன் தன்னுடைய வீட்டிற்குள் நுழைந்ததுமே அவனைக் கண்ட மகிழ்ச்சியில் தொழுவத்திலிருந்த பசு கத்தியது. செழியன் ஆடுகளைப் ஆட்டுப்பட்டியில் விட்டுத் தன் அம்மாவிடம் சென்று, காட்டில் தான் கண்ட நரியைப் பற்றியும் சிங்கம், யானை இவற்றின் சத்தத்தைப் பற்றியும் மிகுந்த பரபரப்போடு கூறினான். அம்மா செழியனின் துணிவைப் பாராட்டினார்.

வாழைத் தோட்டத்திலிருந்த தண்ணீர்த் தொட்டியில் செழியன் குளித்துவிட்டு வந்தான். அம்மா கொடுத்த முறுக்கைத் தின்றான். அப்போது தங்கை பூவிழி பால் பருகிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, செழியனையையும் , பூவிழியையும், பாட்டியையும் சாப்பிட வாருங்கள் என்று அம்மா அழைத்தார். அம்மாவின் குரலைக் கேட்டதும் இருவரும் சென்று கொடுத்த உணவை உண்டனர்.



பின்னர், தூங்கப் போகும் முன் பாட்டி கதை கூறினார். இருவரும் கதையை ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். எலியும் எலிக் குஞ்சும் கீச் ....கீச் ..... என்று சத்தமிட்டன.

எலியின் இந்த சத்தம், பாட்டியின் கதைக்குப்பின்னணிசேர்ப்பதுபோல்



இருந்தது.நாய் குரைக்கும் சத்தத்தைக் கேட்டு வெளியே வந்து பார்த்தான். அங்கே பூனை ஒன்று சீறுவதைக் கண்டு நாய் குரைத்த காரணம் அறிந்தான். இரண்டையும் அருகிலிருந்த தென்னந் தோப்பின் பக்கம் விரட்டிவிட்டு வீட்டிற்கு வந்து படுத்துக் கொண்டான். பாட்டியும், தங்கையும் முன்பே தூங்கிவிட்டனர்.

கொய்யாத் தோப்பிலிருந்த மரத்தின் மேலிருந்து கொக்கரக்கோ ...... கொக்கரக்கோ ......என சேவல் ஒன்று கூவும் ஓசையைக் கேட்டுக் கண் விழித்தான் செழியன்.

கா.....கா...... எனக் காகமும் தன் பங்குக்குக் கரைந்தது.

செழியன் உற்சாகமாகத் துள்ளியெழுந்து அன்றைய நாளின் கடமைகளை மகிழ்ச்சியாகச் செய்ய ஆரம்பித்தான். தன் அனுபவங்களைத் தன் நண்பர்களோடு பகிரப் போகும் ஆவலுடன் பள்ளிக்குக் கிளம்பிச் சென்றான்.

பறவைகள், விலங்குகள் முதலான உயிரினங்களின் ஒலிகளையும் ஒலிப்பு முறைகளையும் இவ்வாறு கூற வேண்டுமென முன்னோர் கூறிய மரபினைத் தொன்று தொட்டுப் பின்பற்றி வருகிறோம்.

## மதிப்பீடு

வினாக்களுக்கு விடையளிக்க.

1. செழியன் ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டிச் செல்லக் காரணம் என்ன?
2. செழியன் செய்தவற்றை உமது சொந்த நடையில் கூறுக.

சிந்தனை வினா.

1. நம்மைப்போல் விலங்குகளுக்கும் பேசும் திறன் கிடைத்தால் எப்படி இருக்கும்? காட்டில் வாழும் விலங்குகள் பேசுவதுபோல் ஓர் உரையாடல் எழுதிக்காட்டுக.
2. நீங்கள் செல்லமாக வளர்க்கும் நாய், பூனை போன்ற விலங்குகள் ஏதேனும் ஆபத்து நேர்வதற்கு முன்பு ஏன் ஒலியெழுப்புகிறது என எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா?

## கற்கண்டு

### மரபுச் சொற்கள்

நம் முன்னோர்கள் எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினார்களோ, அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறே வழங்குவது மரபு.

**ஒலி மரபுச் சொற்கள்**

| | |
|---|---|
| குரங்கு அலப்பும் | புலி உறுமும் |
| குயில் கூவும் | யானை பிளிறும் |
| ஆடு கத்தும் | ஆந்தை அலறும் |
| சிங்கம் கர்ச்சிக்கும், முழங்கும் | மயில் அகவும் |
| நாய் குரைக்கும் | பாம்பு சீறும் |

**விலங்குகளின் இளமைப்பெயர் மரபுச் சொற்கள்**

| | |
|---|---|
| ஆட்டுக் குட்டி | யானைக் கன்று |
| கோழிக் குஞ்சு | சிங்கக் குருளை |
| குதிரைக் குட்டி | புலிப் பறழ் |
| குரங்குக் குட்டி | கீரிப் பிள்ளை |
| மான் கன்று | அணிற்பிள்ளை |

## வினைமரபுச் சொற்கள்

| | |
|---|---|
| அம்பு எய்தார் | சோறு உண்டான் |
| ஆடை நெய்தார் | கூடை முடைந்தார் |
| பூ பறித்தாள் | சுவர் எழுப்பினார் |
| மாத்திரை விழுங்கினான் | முறுக்கு தின்றாள் |
| நீர் குடித்தான் | பால் பருகினான் |



## தாவரங்களின் உறுப்புப்பெயர் மரபுச் சொற்கள்

| | |
|---|---|
| மா, பலா, வாழை | இலை |
| ஈச்சம், தென்னை, பனை | ஓலை |
| கம்பு, கேழ்வரகு, சோளம் | தட்டை |
| நெல், புல், தினை | தாள் |
| அவரை, கத்தரி, முருங்கை, வெள்ளரி | பிஞ்சு |

## பூச்சிகள், பறவைகள், விலங்குகள் – இருப்பிட மரபுச் சொற்கள்

| | |
|---|---|
| கரையான் புற்று | ஆட்டுப் பட்டி |
| மாட்டுத் தொழுவம் | குதிரைக் கொட்டில் |
| கோழிப் பண்ணை | குருவிக் கூடு |
| சிலந்தி வலை | எலி வளை |
| நண்டு வளை | யானைக்கூடம் |

மதிப்பீடு

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. நம் முன்னோர்கள் ஒரு சொல்லை சொல்லியவாறே நாமும் சொல்வது __________

   அ) பழைமை ஆ) புதுமை இ) மரபு ஈ) சிறப்பு

2. யானை __________

   அ) கத்தும் ஆ) பிளிறும் இ) கூவும் ஈ) அலறும்



3. 'ஆந்தை அலறும்' – என்பது __________

   அ) ஒலிமரபு ஆ) வினைமரபு
   இ) இளமைப் பெயர் மரபு ஈ) இருப்பிடப் பெயர் மரபு

4. புலியின் இளமைப் பெயர் __________

   அ) புலிப்பறழ் ஆ) புலிக்குட்டி
   இ) புலிக்கன்று ஈ) புலிப்பிள்ளை


5. 'பூப்பறித்தாள்' என்பது __________

   அ) வினைமரபு ஆ) பெயர் மரபு
   இ) ஒலி மரபு ஈ) இளமைப் பெயர் மரபு

ஆ. ஒலி மரபுகளைப் பொருத்துக.

1. சிங்கம் – கூவும்
2. அணில் – அலப்பும்
3. மயில் – முழங்கும்
4. குயில் – கீச்சிடும்
5. குரங்கு – அகவும்

இ. உயிரினங்களின் படங்களுக்கு உரிய ஒலிமரபை வட்டமிடுக.

1. மயில்  – கூவும், அகவும், பிளிறும், கத்தும்

2. கிளி  – அலப்பும், பேசும், கூவும், கீச்சிடும்

3. குரங்கு  – அகவும், கீச்சிடும், சீறும், அலப்பும்

4. ஆடு  – பேசும், கத்தும், பிளிறும், கூவும்

5. குயில்  – அலப்பும், பிளிறும், அகவும், கூவும்

6. யானை  – கத்தும், கர்ச்சிக்கும், உறுமும், பிளிறும்

## ஈ. வினை மரபுகளைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1 | நீர் | பறித்தாள் |
| 2 | முறுக்கு | எய்தான் |
| 3 | உணவு | குடித்தான் |
| 4 | அம்பு | தின்றான் |
| 5 | பூ | உண்டான் |

## உ. ஒலிமரபுச் சொற்களை எழுதுக

1  ______________________

2  ______________________

3  ______________________

4  ______________________

5  ______________________

6  ______________________

## ஊ. வினாக்களுக்கு விடையளிக்க

1. மரபு என்றால் என்ன?
2. பாடப்பகுதியில் எத்தனை வகையான மரபுச் சொற்கள் இடம்பெற்றுள்ளன?
3. ஒலி மரபிற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

3 கீழ்க்காணும் சொற்றொடர்களைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.

| | | |
|---|---|---|
| மேரி ஆடினாள் | ஈ பறந்தது | புலி உறுமியது |
| பாட்டி தும்மினார் | குழந்தை சிரித்தது | பூனை தூங்கியது |

1. குழந்தை என்ன செய்தது? ______________________________
2. மேரி என்ன செய்தாள்? ______________________________
3. பாட்டி என்ன செய்தார்? ______________________________
4. எது பறந்தது? ______________________________
5. தூங்கியது எது? ______________________________
6. புலி என்ன செய்தது? ______________________________

## அறிந்து கொள்வோம்

எழுத்துகளை எளிதாக அடையாளம் காண உதவும் பெயர்கள்

ண – 'டண்ணகரம்'

ந – 'தந்நகரம்'

ன – 'றன்னகரம்'

ர – இடையின 'ரகரம்'

ற – வல்லின 'றகரம்'

ல – மேல்நோக்கு 'லகரம்'

ள – பொது 'ளகரம்'

ழ – சிறப்பு 'ழகரம்'